எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றால் ஏறத் தாழ ரூபாய் 9 கோடி செலவாகும். மத்திய அரசு கடனாக உதவி கொடுத்துக்கொண்டு வருகிறது. இந்த விவரங்களையெல்லாம் வைத்து பார்த்துத்தான் மற்ற இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட முடியும். மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கின்ற எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know whether the field-oriented research now introduced in Koilpatti is successful, whether all the research findings have been implemented and if they had been successful, whether they would be extended to other areas ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Regarding the field-oriented research, I answered the previous question stating that there is no proposal before the department to extend it to certain other areas. Research will be conducted only in the Koilpatti block and also in Pudukkottai. The results will be beneficial to the entire State.

கொட்டைப்பாக்கு உற்பத்தி.

* 393 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) நீலகிரி மாவட்டத்தில் கொட்டைப்பாக்கு உற்பத்தியை அதிகப் படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

* 394 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the stage at which the development of Arecanut plantation in Peddanaikenpalayam stands at present ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, பெத்து நாயக்கன்பாளையத்தில் பாக்குத் தோட்ட வளர்ச்சிக்கான திட்டமேதும் இல்லை. ஆனால் அங்கே பாக்கு அபிவிருத்தி பற்றிய ஆராய்ச்சி மட்டும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட் டத்தில் தற்போது கொட்டைப்பாக்கு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அங்கே உற்பத்தியாகும் கொட்டைப் பாக்கு வெளிநாட்டிற்கு, வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் ஒரு வேளை மேட்டுப்பாளையத்தைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். மேட்டுப்பாளையம் நீலகிரி மாவட்டத்தில் இல்லை. இது நீலகிரி மாவட்டத்தைப் பற்றிய கேள்வி. அங்கே பாக்கு உற்பத்தியாவதாக என்னிடம் தகவல் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், பொதுவாக பாக்குக்கு அடிக்கடி வியாதி வந்து பெருவாரியான மரங்கள் பட்டுப்போகின்றன. அதுமாதிரி நோய் வராமல் இருப்பதற்கு பிளான்டேஷன் ப்ரொட்டெக்ஷன் ஸ்கீம் வைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பெத்துநாயக்கன்பாளையத்தில் நடைபெற்று வருவது கூட உரம், பூச்சிகொல்லி பற்றிய ஆராய்ச்சியாகும். வேறு சில மாவட்டங்களில் குறிப்பாக கோவை, சேலம், கன்னியாகுமரி, தருமபுரி மாவட்டங்களில் இதற்கான ஆராய்ச்சித் திட்டங்கள் இப்போதும் நடைமுறையில் இருக்கின்றன.

திரு. கு. அ. பொம்மன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் பதில் அளிக்கிற நேரத்தில் நீலகிரி மாவட்டத்தில் பாக்கு பயிராவது இல்லை என்று சொன்னார்கள். ஆனால் கூடலூர் வட்டாரத்தில் ஆங்காங்கு பாக்கு பயிரிடுகிறார்கள். சிறுசிறு விவசாயிகள் அங்கே நிறைய நிலங்களில் பயிர் செய்து இருக்கிறார்கள். அங்கே நிறைய நிலங்களில் இப்படி பாக்கு பயிர் செய்து இருப்பதால், அரசாங்கம் ஏதோ பண்ணையை ஏற்படுத்தி இருப்பதாகச் சொல்கிறார்கள். அது மாதிரி அரசுப் பண்ணை ஒன்றை நீலகிரி மாவட்டத்தில் தொடங்கி, பாக்கு பயிரிடுவதற்கு வாய்ப்பு அதிகரித்துத் தர அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனையை நிச்சயமாகக் கவனித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். ஏனெனில், இதற்கு முன்னாலே கூடலூர் தாலுக்காவில் அரசுப் பண்ணை ஆரம்பிக்க இருந்தோம். அங்கே ஆரம்பிக்காததற்குக் காரணம், அங்கே நிலம் பற்றிய தகராறு ஒன்று சுப்ரீம் கோர்ட்டில் இருந்தது. அதில் அரசுக்குச் சாதகமாக தற்போது தீர்ப்பாகி இருக்கிறது. ஆகவே, அரசு சார்பில் கூடலூர் வட்டத்தில் பாக்கு பயிரிடுவதற்காக அரசுப் பண்ணை ஒன்றை தொடங்க முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்திலே பெத்துநாயக்கன்பாளையத்திலே ஒரு பாக்குப் பண்ணை தொடங்குவதற்கானத் திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது போல், வாழப்பாடு, சேழங்காவடி போன்ற இடத்திலும் விஸ்தரிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் ஏற்கனவே பெத்து நாயக்கன்பாளையத்தில் விஸ்தரிக்கும் திட்டம் இல்லை என்றுதான் கூறி

1975 மார்ச் 20]

னேன். அங்கே ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. குறிப்பாக, சொல்லப் போனால், அந்த ஆராய்ச்சியின் பயனை கண்டறிந்த பின், அதைப்பற்றி விஸ்தரிப்பது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, பாக்கின் விலை இப்போது மிகவும் குறைவாக இருக்கிறது. அதோடு பாக்கைப் பொறுத்தவரையில், வருமான வரிக்கு 1 ஏக்கருக்கு 6 ஏக்கர் (ஸ்டாண்டர்டு ஏக்கர்) வைத்து இருக்கிறோம். ஆகவே, பாக்கு உற்பத்தி பாதிக்கப்பட்டு இருக்கிறது. அரசு பாக்கு உற்பத்தியை இன்னும் விரிவுபடுத்தும் முறையில் விவசாய வருமான வரியிலிருந்து விலக்கு கொடுப்பதற்கு................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வியை யாரிடத்தில் போடுவது என்பது இல்லையா? பாக்கு என்ற உடனேயே எல்லாவற்றையும் குறித்து கேட்டு விடுவதா?

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆகவே, பாக்கு உற்பத்தியை விஸ்தரிக்கும் முறையில், இந்த இடற்பாடுகளையெல்லாம் அகற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பாக்கு விலை குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். எப்போது குறைந்தது என்ற விவரம் என் கைவசம் இப்போது இல்லை. ஆனால் பாக்கு உற்பத்தியை விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பெத்துநாயக்கன்பாளையத்திலும், ஆத்தூரிலும் பாக்கு மரங்கள் காய்ந்து விட்டதால், அங்கே பாக்கு மரங்களை பயிர் செய்ய சிறப்புத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பெத்துநாயக்கன்பாளையத்தில் காய்ந்து விட்டதாகச் சொல்கிறார்கள். அது பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. அங்கே 10,27,000 மரங்கள் இப்போது இருக்கின்றன என்று எனக்குத் தகவல் இருக்கிறது.

திரு. மு. பழனிவேலன்: தலைவரவர்களே, என்னுடைய தொகுதி பெத்துநாயக்கன்பாளையம் தொகுதியாகும். அங்கே ஏராளமான அளவில் பாக்கு மரங்கள் இந்த கடுமையான வறட்சியால் காய்ந்து சாய்ந்து விட்டன. அப்படிப்பட்ட இடத்திற்கு சிறப்பு ஏற்பாடு செய்து, தண்ணீர் கொடுப்பதற்கு ஏதாவது அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இது ஆராய்ச்சி பற்றிய வினா. தண்ணீர் கொடுப்பது பற்றி சம்பந்தப்பட்ட துறைக்கு நான் தெரிவிக்கிறேன்.

திரு. கோவை. செழியன்: பேரவைத் தலைவரவர்களே, பங்களா தேஷ் ஏற்பட்ட பிறகு, பங்களா தேஷிலிருந்து ஏராளமான பாக்கு